# ஒளிச்சுடர்

(சிடார் ராபிட்ஸ் தமிழ் பள்ளி காலாண்டு இதழ்)

## மார்ச் 2026

## முக்கிய நிகழ்வுகள்

*ஏப்ரல் 18, 2026* மூன்றாம் பருவத் தேர்வு

*ஏப்ரல் 25, 2026* சிடார் ராபிட்ஸ் தமிழ் பள்ளி ஆண்டு விழா 2025 – 2026

## பிறந்தநாள் வாழ்த்துகள்

***மார்ச்:*** சுபிக்ஷா ஜெயக்குமார், அதிதி விஜய், முகமது சோயப் முகமது கஜாலி, ஷிவன்யா கார்த்திக், நிலானி பாலசுப்ரமணி, தன்விகா பால சிங்கம், ஸ்ரீநயா நவீன், ரித்திகா வெங்கடராமன், அதித்தி முத்துக்குமார், அதிதி சுரேஷ் கண்ணன், குருவத்சன் நிர்மல் ராஜ்.

***ஏப்ரல்:*** அர்ஜுன் தியாகராஜன், அரினா ரூபன், ஆதி அன்பரசு, ரியான் ஜேஸ்றீன், கேடன் பிஜு, யாழினி அன்புராஜ், பிரத்யுஷ் ஜெயகார்த்திகேயன்.

*மே:* அதித்தி சச்சிதானந்த், அனன்யா வைத்தீஸ்வரன், தியான் இளங்கோ, ஸ்ரீஹன் தங்கவேல், அதித்தி சங்கரேஸ்வரி-ரமேஷ், சாய்ஸ்ருதி ரமேஷ், நித்திலன் பாலசுப்ரமணி, தருண் வேலுமணி, வன்ஷிகா விஸ்வநாதன், ஸ்ரீராம் பாலசுப்ரமணியன், ஹரிஷ் செந்தில்குமார்

## விளையாட்டு நிலையம்

### குறுக்கெழுத்துப் புதிர்



| மேலிருந்து கீழ்: | இடமிருந்து வலம்: |
|---|---|
| 1. தாவரங்களில் பெரியது<br>2. மேலாடைக்கு வேறு பெயர்<br>3. பாலைவன கப்பல்<br>6. கசப்பாக இருக்கும் காய்<br>9. பால் தரும் விலங்கு | 1. பலாச்சுளையின் நிறம்,<br>4. காற்றில் பறக்க விடுவது.<br>8. நான்கு கால்கள் கொண்டவை. அமருவதற்கு பயன்படுவது. |

| கீழிருந்து மேல்: | வலமிருந்து இடம்: |
|---|---|
| 5. அண்ணனுக்கு இளையவன்.<br>10. வேகமாக ஓடும் விலங்கு, சவாரி செய்ய பயன்படும்.<br>11. சுவரில் ஊர்ந்து செல்லும் விலங்கு | 7. பொதி சுமக்கும் விலங்கு.<br>9. ஏரிகளில் பயணம் செய்ய பயன்படுவது. |

## தமிழ் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்களின் சாதனைகள்




அயோவாவில் நடைபெற்ற குளிர்கால விளையாட்டு போட்டிகளில், **மார்ஷியல் ஆர்ட்ஸ் பிரிவில்** தங்கமும் வெள்ளியும் ஆகிய பதக்கங்களை வென்று சிறப்பான சாதனையைப் பதிவு செய்துள்ளார், நிலை 5 மாணவர் **பரீக்ஷித் துரைராஜ்**. அவரின் உறுதி, தொடர்ந்து செய்த முயற்சி மற்றும் விடாமுயற்சி இந்த சிறப்பான வெற்றிக்கு காரணமாக அமைந்துள்ளது. மனமார்ந்த வாழ்த்துகள்.

---



***Gymnastics* போட்டியில்** *(Silver Level,* வயது 11 குழு) – முதலாவது இடத்தை **கீர்த்தனா ராம்குமார்** பெற்றுள்ளார். அவர் தற்போது நிலை 6-ல் கல்வி பயின்று வருகிறார். அவரின் கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் இந்த சிறந்த வெற்றிக்கு காரணமாகும். வாழ்த்துகள்!

---



ஹேசல் பாயிண்ட் இடைநிலைப் பள்ளியில், டிசம்பர் மாதம் 2025ற்கான **சிறந்த மாணவர் விருதை**, நிலை 6 மாணவி **தனிஷா புவியரசன்** பெற்றுள்ளார்.

அவரின் கல்வித் திறன், ஒழுக்கம் மற்றும் முயற்சி இந்த பெருமைக்குரிய சாதனைக்கு காரணமாகும்.

அவருக்கு மனமார்ந்த வாழ்த்துகள்.



எக்கோ ஹில் தொடக்கப் பள்ளியில் நவம்பர் மாத விருது பெற்ற மாணவர்களில் **இலக்கியா இளங்கோ** சிறப்பிடம் பெற்றுள்ளார். அவரின் கல்வித் திறன், ஒழுக்கம் மற்றும் தொடர்ந்து காட்டும் முயற்சி இந்த அங்கீகாரத்திற்கு காரணமாகும். ஆசிரியர்களின் பாராட்டையும் நண்பர்களின் மரியாதையையும் பெற்றுள்ள இலக்கியா, அனைவருக்கும் முன்மாதிரியாக விளங்குகிறார்.
இன்னும் பல உயரங்களை அடைய மனமார்ந்த வாழ்த்துகள்

---




*2026 ஆம் ஆண்டு Drake University-இல் நடைபெற்ற* ***HOSA Seminar Awards*** நிகழ்வில், **அபிநவ் சுரேஷ்** மற்றும் **ஹரிணி பாலாஜி** சிறப்பான சாதனையைப் பதிவு செய்து விருதுகளை பெற்றுள்ளனர். மருத்துவ மற்றும் சுகாதார துறையில் அவர்களின் அறிவு, திறமை மற்றும் அர்ப்பணிப்பு இந்த வெற்றிக்கு காரணமாகும். இம்மாணவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துகள்

---



ஹேசல் பாயிண்ட் இடைநிலைப் பள்ளியில் நடைபெற்ற **பூப்பந்து போட்டி** (இரட்டையர்) பிரிவில், **நிலை 6 மாணவி தனிஷா புவியரசன் மற்றும் நிலை 5 மாணவி சாய்சுருதி ரமேஷ்** இரண்டாம் பரிசை பெற்றுள்ளனர்.
சிறப்பம்சம்: கடந்த 5 ஆண்டுகளில், இறுதிப் போட்டியில் பங்கேற்ற முதல் பெண்கள் அணியாக இவர்களும் சாதனை படைத்துள்ளனர். இம்மாணவிகளுக்கு மனமார்ந்த வாழ்த்துகள்.

---



ஓக் ரிட்ஜ் இடைநிலை பள்ளியில், மார்ச் மாதத்திற்கான ***Best Student of the Month*** விருதை, மாணவர்கள் **விஷ்வகார்த்திக் வேல்முருகன்** மற்றும் **ஷிவானி விஜயகுமார்** பெற்றுள்ளனர். அவர்களின் கல்வித் திறன், ஒழுக்கம் மற்றும் தொடர்ச்சியான முயற்சி இந்த பெருமைக்குரிய அங்கீகாரத்திற்கு காரணமாகும். இம்மாணவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துகள்.

---




ஹேசல் பாயிண்ட் இடைநிலைப் பள்ளியில் நடைபெற்ற ***Connect 4*** போட்டியில், நிலை 5 மாணவர் **வருண் கார்த்திக் வேல்முருகன்** சிறப்பான திறமையை வெளிப்படுத்தி *Grand Champion* பட்டத்தை பெற்றுள்ளார். இந்த போட்டியில் *178* மாணவர்கள் பங்கேற்ற நிலையில், அவரது சிறந்த யோசனை திறன் மற்றும் கவனக்குறைவில்லாத விளையாட்டு இந்த உயர்ந்த வெற்றிக்கு வழிவகுத்தது. அவருக்கு மனமார்ந்த வாழ்த்துகள்



சிடார் ராபிட்ஸ் பிரெப் பள்ளியில் கல்வி பயிலும் **பிரத்யூஷ் ஜெயகார்த்திகேயன்**, கணிதத்தில் ஆழ்ந்த புரிதல், துல்லியமான அணுகுமுறை மற்றும் தொடர்ந்து வெளிப்படுத்திய சிறந்த செயல்திறன் ஆகியவற்றின் மூலம் **“சூப்பர் மாணவர்”** என்ற பெருமைக்குரிய விருதைப் பெற்றுள்ளார். அவரின் கணிதத் திறன், பகுத்தறிவு சிந்தனை மற்றும் விடாமுயற்சி இந்த சிறப்பான அங்கீகாரத்திற்கு காரணமாகும், மனமார்ந்த வாழ்த்துகள்!

*Future City* என்பது 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு உருவாக்கப்பட்ட, செயல்முறை அடிப்படையிலான (*hands-on*) பல்துறை (*cross-curricular*) கல்வித் திட்டமாகும். இந்த திட்டம் மூலம் மாணவர்கள் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (*STEM*) ஆகியவற்றை நேரடியாக அனுபவித்து கற்றுக்கொள்ளும் வாய்ப்பைப் பெறுகிறார்கள்.
நவீன நகரங்களை உருவாக்கும் சிந்தனை, புதுமை மற்றும் பிரச்சினை தீர்க்கும் திறன்களை வளர்க்கும் ஒரு சிறந்த கல்வி முயற்சியாக இது திகழ்கிறது.
பங்கேற்பவர்கள்: மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் வழிகாட்டிகள். அமெரிக்கா, கனடா, சீனா, எகிப்து மற்றும் நைஜீரியா போன்ற நாடுகளில் இருந்து ஆண்டுதோறும் 45,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இதில் பங்கேற்கின்றனர்.



"உண்மையான மக்களுக்கான உன்னதமான நகரம்" (*Real City for Real People*) என்ற தலைப்பில் நடைபெற்ற போட்டியில், ***Bolton* மற்றும் *Merck's Special Award*** வழங்கப்பட்டுள்ளது. சமூக நலனையும், மனித மையப்படுத்திய நகர வளர்ச்சியையும் சிறப்பாக பிரதிபலித்த திட்டத்திற்காக இந்த விருது வழங்கப்பட்டது.
இந்த சிறப்பான சாதனையை பெற்ற தமிழ் பள்ளி மாணவர்கள்: **ஹரிஷ் பாலாஜி, நேஹன்ராஜ் ரமேஷ், பிரத்யூஷ் ஜெயகார்த்திகேயன், தருண் வேலுமணி.**
இந்த வெற்றிக்கு முக்கிய காரணமாக, மாணவர்களை திறமையாக வழிநடத்தி முழுமையான ஆதரவை வழங்கிய மென்டர் **ஹரிணி பால்பாண்டியன்** அவர்களின் அர்ப்பணிப்பும் குறிப்பிடத்தக்கது.
அனைவருக்கும் மனமார்ந்த பாராட்டுகளும், இன்னும் பல உயரங்களை அடைய வாழ்த்துகளும்.



***Structural Support Special Award (For Strong Team Foundations)"*** என்ற விருதை, **தேவ் சரண் ராம்குமார், ஜொவனா ஜேம்ஸ்** மற்றும் அவருடன் இணைந்து செயல்பட்ட *Linn-Mar* பள்ளி மாணவர்கள் பெற்றுள்ளனர். இந்த விருது, குழுவின் வலுவான அடித்தளம், ஒற்றுமை, திட்டமிடல் திறன் மற்றும் புதுமையான சிந்தனையை மதிப்பளித்து வழங்கப்பட்டது. மாணவர்கள் இணைந்து செயல்பட்ட ஒத்துழைப்பும், உறுதியான முயற்சியும், இந்த பெருமைக்குரிய வெற்றிக்கு வழிவகுத்தது. அவர்களின் அர்ப்பணிப்பு, கட்டுப்பாடு மற்றும் குழு ஒருங்கிணைப்பு திறன் அனைவருக்கும் முன்மாதிரியாக திகழ்கிறது. தேவ் சரண் ராம்குமார், ஜொவனா ஜேம்ஸ் அணிக்கு வாழ்த்துக்கள்!
இன்னும் பல உயரங்களை அவர்கள் அடைய வாழ்த்துகிறோம்!



*Future City Competition 2026"* போட்டியில் மாணவர்கள் சிறப்பாக கலந்து கொண்டு "***Best Land Surveying Practices***" விருதை பெற்றுள்ளனர். அவர்களின் திட்டத்தில் நில அளவைத்துறை தொடர்பான துல்லியமான அணுகுமுறை, சிந்தனை திறன் மற்றும் தொழில்நுட்ப அறிவை வெளிப்படுத்துகிறது.
**கண்மணி மணிவண்ணன்** மற்றும் **அக்ஷித் யுவராஜூ** அவர்களின் திறமை, குழு ஒருங்கிணைப்பு மற்றும் புதுமையான சிந்தனை இந்த வெற்றிக்கு காரணம்.
இன்னும் பல சாதனைகள் பெற மனமார்ந்த வாழ்த்துகள்!